## தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

## தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகம்

# பதவி வெற்றிடங்கள்

**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சகத்துடன் இணைந்து** 2010 **ஆம் ஆண்டு** 12 **ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களிற்கு பின்வரும் தகுதிகளைப் பூர்த்தி செய்தவர்கிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள், தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகத்தினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் பின்னர் வெற்றிடங்களுக்கான எண்ணிக்கையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.**

**01. வணிக மேம்பாட்டு அலுவலர் - பதவி வெற்றிடம் 01**

1. **சம்பளக் குறியீடு -** JM 1-1 – 2016
2. **சம்பள அளவுத்திட்டம் - ரூபா** 42,600/- - 10x755 – 18x1,135 – 70,580/-

(02/2016 **ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கைக்கு இணங்க, நியமணத்தின் போது அடிப்படைச் சம்பளம் ரூபா.** 42,600/- **ஆகும்**)

3. **தகைமைகள்**

3.1. **வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள்:**

- **பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு பாடத்துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.**

- **அரச, பகுதி-அரச அல்லது தனியார் நிறுவனமொன்றில் வணிக மேம்பாடு தொடர்பாகப் பணியாற்றிய அனுபவங்கள் மற்றும் அதிகாரங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

**வயதெல்லை:** 22 **வயதிற்குக் குறையாதவராகவும்** 45 **வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அதிகூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.**

3.2. **உள்ளக விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள்:**

01. **மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான கல்வித்தகைமைகளப் பூர்த்தி செய்திருத்தல்.**

**மற்றும்**

02. **சம்மந்தப்பட்ட துறைக்குப் பொருத்தமான பதவியில் "முகாமைத்துவ உதவியாளர்" சேவைகள் தொகுதியின் இரண்டாம் தரத்தைச் சேர்ந்த பதவியில் ஐந்து** (05) **வருடகாலம் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல்.**

4. **ஆட்சேர்ப்பு முறைமை:**

**நியமன அதிகாரியால் நியமிக்கப்படும் குழுவொன்றின் மூலம் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம்**

**02. தகவல் தொழில்நுட்ப அதிகாரி - பதவி வெற்றிடங்கள் 01**

1. **சம்பளக் குறியீடு -** JM 1-1 – 2016
2. **சம்பள அளவுத்திட்டம் - ரூபா** 42,600/- - 10x755 – 18x1,135 – 70,580/-

(02/2016 **ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கைக்கு இணங்க, நியமணத்தின் போது அடிப்படைச் சம்பளம் ரூபா.** 42,600/- **ஆகும்**)

3. **தகைமைகள்**

3.1. **வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள்:**

- **பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.**

- **தகவல் தொழில்நுட்ப பட்டதாரிகளுக்குஃ தகவல் தொழில்நுட்பத்தை ஒரு பாடமாகக் கற்ற விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.**

**வயதெல்லை:** 22 **வயதிற்குக் குறையாதவராகவும்** 45 **வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அதிகூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.**

3.2. **உள்ளக விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள்:**

01. **மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான கல்வித்தகைமைகளப் பூர்த்தி செய்திருத்தல்.**

**மற்றும்**

02. **சம்மந்தப்பட்ட துறைக்குப் பொருத்தமான பதவியில் "முகாமைத்துவ உதவியாளர்" சேவைகள் தொகுதியின் இரண்டாம் தரத்தைச் சேர்ந்த பதவியில் ஐந்து** (05) **வருடகாலம் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டிருத்தல்.**

4. **ஆட்சேர்ப்பு முறைமை:**

**நியமன அதிகாரியால் நியமிக்கப்படும் குழுவொன்றின் மூலம் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம்.**

**03. முகாமைத்துவ உதவியாளர் (தகவல்தொழில்நுட்ப அல்லாத)-பதவி வெற்றிடங்கள் 05**

1. **சேவைப்பிரிவு - முகாமைத்துவ உதவியாளர் (தொழில் நுட்பம் அல்லாத)**
2. **சம்பள வகை** - MA 1-1
3. **சம்பள அளவுத்திட்டம் - ரூபா** 27,910 – 10x300 – 7x350 – 4x495 – 20x660 - **ரூபா.** 48,540

(02/2016 **ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு இணங்க, நியமணத்தின் போது அடிப்படைச் சம்பளம் ரூபா.** 27,910/- **ஆகும்**)

4. **தகைமைகள்:**

4.1. **வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான கல்வித் தகைமைகள்.**

- **க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் ஃ தமிழ், கணிதம், ஆங்கில மொழி ஆகிய பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்**

  **மற்றும்**

- **க. பொ. த (உயர் தரப்) பரீடசையில் குறைந்த பட்சம் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் (பொது உளச்சார்பு பரீட்சை தவிர)**

4.2. **உள்ளக வி;ண்ணப்பதாரிகளுக்கான கல்வித்தகைமைகள்**

**முதலாம் தரம் - தொழில் பயிற்சி அல்லாத மற்றும் தொழில் பயிற்சிச் சேவைப் பிரிவுகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்;ட ஊழியர்கள் விண்ணப்பிக்கலாம்.**

I. **க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ், கணிதம், ஆங்கில மொழி ஆகிய பாடங்கள் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.**

   **மற்றும்**

II. **சேவையில் நிரந்தரமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அந்நியமனங்கள் ஸ்தீரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.**

III. **உரிய திகதிக்கு முன்னதாக நிரந்தர நியமனத்தில் கீழ்நிலை அதிகாரிகளால் 05 வருட தொடர்ச்சியான திருப்திகரமான சேவையினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.**

; 5. **ஆட்சேர்ப்பு முறைமை:**

**நியமன அதிகாரியால் நியமிக்கப்படும் குழுவொன்றின் மூலம் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையொன்றின் மூலம்.**

**வயதெல்லை: 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அதிகூடிய வயதெல்லை ஏற்புடையதாகாது.**

**வேறு தகைமைகள்:**

I. **இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.**
II. **பதவிக்கான பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல்.**
III. **நன்மதிப்புக்குரியவராக இருத்தல் வேண்டும்.**

**நியமனத்தின் தன்மை:**

**நிலையான, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு உரித்துடையவராவார்.**

**விண்ணப்பிக்கும் முறை:**

**இவ்வறிவிப்பின் முடிவில் உள்ள மாதிரி விண்ணப்பத்தின் படி A4 அளவிலான காகிதத்தின் இருபுறங்களையும் பயன்படுத்தி 01 முதல் 03 வரையான பந்திகள் முதல் பக்கத்திலும் மீதமுள்ளவை ஏனைய பக்கங்களிலும் வருமாறு வடிவமைக்கப்பட்ட விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து கல்வி, தொழில் தகைமைகள் மற்றும் பணிச்சான்றிதழ் என்பனவற்றை நிரூபிக்கக்கூடிய பிரதிகளுடன் விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். மேலும், ஏற்கனவே அரச நிறுவனங்கள்/ அரச துறையில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பப் படிவத்தை நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும். குறிப்பிட்ட மாதிரிப் படிவத்திற்குப் பொருந்தாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.**

**விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைக்கும் போது கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு 2024.05.30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்ககூடியதாக கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலின் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். பல பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் போது, விண்ணப்பங்கள் தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**

**விண்ணப்பப் படிவங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். நேர்முகப்பரீட்சையானது குழுவொன்றின் மூலம் நடாத்தப்படும் என்;பதுடன் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமே மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடாத்தப்படும்.**

**இப்பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான இறுதித் தீர்மானம் தேசிய தொழிற்கற்கைகள் நிறுவனத்தி;டமே உள்ளது.**


**தொடர்புகளுக்கு:** 011 27 86 541
**மின்னஞ்சல்:** nilsprocurementunit@gmail.com
**இணையத்தளம்:** www.nils.gov.lk

**பணிப்பாளர்**
**தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகம்**
**இரண்டாம் மாடி,**
**தொழில் செயலகம்,**
**கொழும்பு** - 05